STC.No.41/2026 PW1.திரு.ஜெசிமா பாத்திமா

தேதி– 08.06.2026

எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் 12 ஆம் வகுப்பு படித்துள்ளேன். நான் வேலை செய்கிறேனா என்றால் இல்லை. எனது கணவர் என்ன படித்துள்ளார் என்றால் அவர் படிக்கவில்லை, வண்டி கடை வைத்துள்ளார். எதிரி எனது கணவர் மூலம் பழக்கமா என்றால் எனது கடைக்கு வருவதன் மூலம் பழக்கம். இந்த வழக்கை தவிர்த்து எதிரிக்கும், எனக்கும் வேறு கொடுக்கல் வாங்கல் இல்லை என்றால் சரிதான். நான் கூறிய விபரங்களின் அடிப்படையில்தான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ல் பழனிசெட்டிப்பட்டியில் வைத்து கைமாற்று கடனிற்காக வாங்கிய பணத்திற்காக என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ல் எந்த தேதியில் எவ்வளவு தொகை வாங்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வட்டிக்கு பணம் கொடுத்தேனா என்றால் இல்லை கைமாற்றாக கொடுத்தேன்.

2. நான் எந்த தேதியில் பணம் கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை, நான்கு தவணைகளாக எதிரிக்கு பணம் கொடுத்தேன். கடைசியாக கொடுத்த பணத்தின் போது 04.11.2025 தேதியிட்டு காசோலை கொடுத்தார்.முதல் இரண்டு தவணைகளில் ரூபாய் 50,000 என இரண்டு முறை கொடுத்தேன். மூன்றாவது முறை ரூபாய் நாற்பதாயிரம் கொடுத்தேன். நான்காவது ரூபாய் முப்பதாயிரம் கொடுத்தேன். அடுத்து 20000 கொடுத்தேன். நான் மேற்படி தவணைகளாக பணம் கொடுக்கவில்லை என்றும், தற்போது மேற்படி விபரத்தை பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒவ்வொரு தவணைகளுக்கு இடைப்பட்ட காலத்தில் எதிரி வட்டி கொடுத்தாரா என்றால் இல்லை, வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. முதல் தவணை எதிரிக்கு பணம் கொடுத்தது போது அவரிடம் ஏதேனும் ஆவணம் கேட்டேன் என்றால் இல்லை, நம்பிக்கையின் பேரில் பணம் கொடுத்தேன்.

3. எதிரி எங்கு வைத்து காசோலை கொடுத்தார் என்று வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் எதிரிக்கு எந்தெந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்பதை குறித்து குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து வழக்கு தாக்கல் செய்யும் வரை எதிரி எந்த தொகையும் எனக்கு திருப்பி செலுத்தவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரிதான். நான் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கணக்கு வைத்துள்ளேன். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பை படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 25.08.2025 ம் தேதியன்று எதிரியின் மனைவி வங்கி கணக்கில் இருந்து எனது வங்கி கணக்கிற்கு 49 ஆயிரம் என இரண்டு முறை அனுப்பி உள்ளார் என்றால் சரிதான், அந்த தொகைக்கும், இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.எதிரி ஏற்கனவே வாங்கிய பணத்தை திருப்பி செலுத்தினார்.

4) 26.08.2025 எதிரியின் மனைவி வங்கி கணக்கில் இருந்து எனக்கு 2000 பணம் வந்துள்ளது என்றால் சரிதான். 25.08.2025 ல் எதிரியும், அவரது மனைவியும் சேர்ந்து ரொக்கமாக ஐம்பதாயிரம் பணம் எனக்கு செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. எதிரியிடம் வட்டி அதிகமாக கேட்டதால் எனக்கும், அவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி எனக்கு அரசு வேலை வாங்கித் தருவதாக கூறி தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நான் புகார் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த புகார் மனு சம்பந்தமாக தேனி பிசி பட்டி காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்றது என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்த முன்னாள் ஓய்வு பெற்ற மாவட்ட துணை கண்காணிப்பாளர் குலாம் என்பவரை வைத்து எதிரியை மிரட்டி காசோலையை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. இதற்குப் பின்பு எனக்கும் எதிரிக்கும் ஏதேனும் வரவு செலவு இருந்ததா என்றால் இல்லை.

5. எதிரி எனக்கு மொத்தமாக எவ்வளவு தர வேண்டும் என்று கூறுகிறேன் என்றால் இரண்டு லட்சம் தர வேண்டும். எதிரி எனக்கு வேலை வாங்கி தருவதாக கூறி நான்கு லட்சம் பணம் வாங்கியதாக பள்ளி கல்வி இணை இயக்குனர் சென்னை அலுவலகத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் என்னுடையதுதான். என்னிடம்

காட்டப்படும் புகார் மனுவானது என்னால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பள்ளிக்கல்வி இணை இயக்குனர் அவர்களிடம் கொடுத்த **புகார் மனு எ.சா.ஆ.1** ஆகும்.மேற்படி புகார் மனுவில் எதிரி எனக்கு வேலை வாங்கி தருவதாக கூறி நான்கு லட்சம் பணம் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரியிடம் தாவா காசோலையை பிசி பட்டி காவல் நிலையத்தில் வைத்து மிரட்டி வாங்கி நிரப்பியது என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய தொகைக்கு அசல் மற்றும் வட்டியை திருப்பி செலுத்தி விட்டார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.08 18:06:02 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam